

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவ மழையை எதிர்கொள்ள எடுக்கப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்றது .

### தென்காசி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை:

# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முன்னெச்சரிக்கை குறித்து ஆலோசனை!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் மேற்கொண்டார்!

தென்காசி, அக்.23 - தென்காசி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வு மற்றும் பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பான ஆய்வுக் கூட்டம் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், திட்ட இயக்குனர் தண்டபாணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் வரவேற்றார்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், முன்னெச்சரிக்கை தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சென்னையில் உள்ள கட்டுப்பாடு அறைக்கு வந்து கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். அதனால் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் முழு வீச்சுடன் வடகிழக்கு பருவ மழையை எதிர்கொள்ள வேண்டும் என்றும் மற்றும் பல்வேறு ஆலோசனை களை வழங்கியும் எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் கே.கே. எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழை குறித்து கட்டுப்பாடு அறைக்கு வந்து அனைத்து அமைச்சர்களுக்கும் அவசர நிலை கருத்தில் கொண்டு 4 தினங்களுக்கு முன்பே வடகிழக்கு பருவமழையை எதிர் கொள்ள வேண்டும் என ஆணையிட்டார்கள். வடகிழக்கு பருவ மழையை திறமையாக சமாளிக்க வேண்டும் என்ற எண்ணம் முதலமைச்சர் அவர்களுக்கு உள்ளது. முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தென்காசி மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை காரணமாக மேலப்பாவூர் கால்வாய் நேரடியாக பார்வையிட்டும் குற்றாலம் மெயின் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பகுதிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் அமைச்சர்கள் அந்தந்த மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் விதத்தில் முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ளுமாறு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார். இதனால் அமைச்சர்கள் அந்தந்த பகுதிகளில் முகாமிட்டுள்ளனர்.

இந்த சூழ்நிலையில் நேற்று மதியம் முதல்வர் அவர்கள் திடீரென மாநில கட்டுப்பாட்டு மையத்திற்கு வருகை தந்து ஆய்வு மேற்கொண்டார். அங்கிருந்தே பாதிப்புகள் ஏற்படலாம் என்று கண்டறியப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி காட்சி வாயிலாக பேசி அறிவுரைகள் வழங்கினார். காலையிலும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தி இருக்கிறார். வடகிழக்கு பருவமழையை திறமையாக எதிர்கொண்டு சமாளிக்க வேண்டும் என்ற எண்ணம் முதல்வர் அவர்களிடம் உள்ளது. பாதிப்புகளை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும்.

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை வழக்கத்தை விட சற்று கூடுதலாக பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் 16. 6 செண்டிமீட்டர் மழை பெய்துள்ளது. ஆனால் இந்த ஆண்டு கடந்த 20 தினங்களில் மட்டும் 23.75 செண்டிமீட்டர் மழை பெய்துள்ளது. அனைத்து துறை அதிகாரிகளுக்குமே இதில் பணியும், கடமையும் உள்ளது. காவல்துறையும், தீயணைப்பு மீட்பு பணிகள் துறையும், பொதுமக்களுக்கு வடகிழக்கு பருவ மழையினால் உயிர் சேதம் இல்லாத அளவிற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வருவாய்த்துறை அதிகாரிகள் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று கருதப்படும் இடங்களில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். வேளாண் துறையினர் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அது குறித்த விபரங்களை கணக்கெடுத்து ஆட்சியருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

மின்வாரியத்தினர் மின்சாரம் எங்கும் தடைபடவில்லை என்னும் அளவிற்கு நேர்த்தியாக செயல்பட வேண்டும். நீர்வளத்துறை அதிகாரிகள் உடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ள பகுதிகளை கண்டறிந்து தேவையான முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வரும்போது கூட மேலப்பாவூர் பகுதியில் தடுப்பணை ஒன்று சேதம் அடைந்துள்ளது பார்வையிட்டு வந்தேன். தொடர்ந்து குற்றாலம் மெயின் அருவி பகுதியில் சேதமடைந்த பகுதிகளை பார்வையிட்டேன். தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட அனைத்து அரசு துறை அதிகாரிகளும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டிய நேரம் இந்த வடகிழக்கு பருவமழை காலம் ஆகும்.

முதல்வர் அவர்கள் கண்ணும் கருத்துமாக ஒவ்வொரு பணிகளையும் சரிபார்த்து வருகிறார். அமைச்சர்கள் ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோர் என்ன செய்கிறார்கள் என்பதை கண்காணிக்க கூடியவராக முதல்வர் அவர்கள் இருக்கிறார். இந்த ஆய்வுக்கூட்டம் நடப்பது கூட முதல்வர் அவர்களுக்கு தெரியும். அவர்களிடம் தெரிவித்து விட்டு தான் வந்தேன். நமது பணிகள் குறைகள், குழப்பங்களுக்கு அப்பாற்பட்டு தெளிவாக இருக்க வேண்டும். தொடர் மழை காரணமாக பணிகள் தடைபட்டுள்ளது. மழை நின்றவுடன் சாலை சீரமைப்பு பணிகளை நெடுஞ்சாலை துறையினர் விரைவாக மேற் கொள்ள வேண்டும்.

மழை காரணமாக உயிர் சேதம் இருக்கக் கூடாது என்பதில் முதல்வர் அவர்கள் கவனமாக இருக்கிறார். அமைச்சர்களை சந்திக்கும் போது முதலில் அதைத் தான் கேட்கிறார். மழையினால் சேதமடைந்த குடிசை மற்றும் கட்டிடங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும். மழையினால் மின்சாரம் தடை என்ற நிலை ஏற்பட்டு பெயர் கெட்டு விடாத அளவிற்கு மின்வாரியத்தினர் கவனமுடன் செயல்பட வேண்டும். ஏற்கனவே உங்களது பணிகள் சிறப்பாக இருந்தாலும் மேலும் சிறப்புடன் பணியாற்ற வேண்டும்.

தற்போது 14 குடிசைகள் சேதம் அடைந்துள்ளது. 6 ஓட்டு வீடுகள் சேதமடைந்துள்ளது. அதற்குரிய நிவாரணம் உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை துறை சார்பில் 5.65 ஹெக்டேரும் வேளாண்மை துறை சார்பில் 9.67 ஹெக்டேரும் பாதிக்கப் பட்டுள்ளதாக இப்போது வரை கணக்கெடுக்கப்பட்டுள்ளது. மழை தொடர்வதால் இனி வரும் பாதிப்புகளும் கணக்கெடுக்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்தில் அணைகளை பொறுத்தவரை 5 அணைக்கட்டுகள் உள்ளது. 132 அடி கொள்ளளவு கொண்ட அடவிநயினார் அணை, தற்போது 120 அடி யாக தண்ணீர் உள்ளது இன்னும் சில தினங்களில் அது நிரம்புவதற்கு வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நிரம்பினால் அணை திறந்து விடப்படும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. 40 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளது. நீர்நிலை ஆக்கிரமிப்புகள் மாவட்ட நிர்வாகத்துடன் கலந்து எந்த அளவிற்கு விரைவாக அகற்றப்பட முடியுமோ அந்த அளவிற்கு அகற்றப்படும். ஆக்கிரமிப்பு அகற்றும் பொழுது பல இடங்களில் பிரச்சனை வருகிறது. வெள்ளம் வந்து பாதிக்கப்படும் பொழுது அதனை நாம் அகற்றி தான் ஆக வண்டும். கால்வாய்களில் அடைப்பு இல்லாதவாறு பார்த்துக் கொள்ளுமாறு அதிகாரிகளை அறிவுறுத்தி இருக்கிறோம்.

தென்காசி மாவட்டத்திற்கு முதல்வர் அவர்கள் வருகை தேதி குறிப்பிடாமல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மழை நின்றவுடன் முதல்வர் அவர்களின் வருகை நிச்சயம் இருக்கும். மாவட்டத்தில் உள்ள 500 க்கும் மேற்பட்ட குளங்களில் 20 முதல் 25 சதவிகிதம் குளங்கள் மட்டுமே நிரம்பியுள்ளது மற்ற குளங்களில் 25 முதல் 50 சதவீதம் அளவிற்கு தண்ணீர் உள்ளது. வடகிழக்கு பருவ மழையை பாதிப்பு இல்லாமல் எதிர் கொள்ள வேண்டும் என்பதில் முதல்வர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள். மாவட்ட நிர்வாகத்திடம் உள்ளது போன்று மாநகராட்சிகளிலும் கட்டுப்பாடு அறைகள் அமைக்க உத்தரவிடப்பட்டுள் ளது. மீட்பு பணிகளில் ஈடுபடுவதற்கு தேவையான என்.டி. ஆர்.எப். டி.ஆர்.எப் வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர். தேவைப்படும் இடங்களுக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை, ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, ரமேஷ், பொன்செல்வன, சேக்முகமது, பேரூர் செயலாளர்கள் குட்டி, முத்தையா, பண்டாரம், செங்கோட்டை நகர செயலாளர் வெங்கடேசன், அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, முருகன், அழகு தமிழ் சங்கர், துணை அமைப்பாளர்கள் சுப்பிரமணியன், முகமது அப்துல் ரஹீம், கரிசல் வேலுச்சாமி கருப்பணன், குற்றாலம் சுரேஷ் கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், ஒன்றியக் குழு துணைத் தலைவர்கள் ஐவேந்திரன் தினேஷ், கனகராஜ் முத்து பாண்டியன்,

உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, தொப்பம்பட்டியில் தொப்பம்பட்டி மத்திய ஒன்றியம், தொப்பம்பட்டி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட துணைச் செயலாளர் ராஜாமணி தலைமையிலும், பார்வையாளர் பரணி மணி முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தொப்பம்பட்டி பொன்ராஜ், சுப்பிரமணி, கிருஷ்ணசாமி, அன்பு (எ) காதர்பாட்சா, கருப்புசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வு மற்றும் பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பான ஆய்வுக் கூட்டம் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், திட்ட இயக்குனர் தண்டபாணி ஆகியோர் உள்ளனர். இந்நிகழ்வில் அனைத்து துறை அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### கடலூர் மாவட்டம்

# ஆண்டார் முள்ளிப்பள்ளம் கிராமத்தில் சுவர் இடிந்து இருவர் பலி!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆறுதல்!

கடலூர், அக். 23 - வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் வட்டம், ஆண்டார் முள்ளிப்பள்ளம் கிராமத்தில் கனமழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து உயிரிழந்தவர்களின் இல்லத்திற்கு நேற்று (22.10.2025) நேரில் சென்று அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.



வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவிக்கையில்,

கடலூர் வட்டம், ஆண்டார் முள்ளிப்பள்ளம் கிராமத்தில் வசித்து வரும் திருமதி அசோதை (வயது 60) க/பெ.மணி மற்றும் அவரது மகள் திருமதி ஜெயா (வயது 30) க/பெ.ராயர் என்பவர்கள் தங்களுக்குச் சொந்தமான வீட்டில் இருந்தபோது கனமழையின் காரணமாக நேற்று (22.10.2025) ஈரமடைந்த வீட்டின் சுவர் இடிந்து விழுந்து படுகாயம் அடைந்தவர்களை மீட்கப் பட்டதில் திருமதி அசோதை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். திருமதி ஜெயா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே இறந்து விட்டார்.

இத்துயர செய்தி அறிந்து முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க இறந்தவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபம் மற்றும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மேலும், இறந்தவர்களின் குடும்பத்திற்கு அரசின் சார்பாக கிடைக்க வேண்டிய நிவாரண உதவிகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. இறந்தவர்களின் உடல் பிரேத பரிசோதனைக்கு பரங்கிப் பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பப் பட்டுள்ளது.

கனமழை காலங்களில் பொதுமக்கள் சேதடைந்த மற்றும் உறுதிதன்மையற்ற சுவர்கள் மற்றும் கூரைகள் உள்ள வீடுகளில் தங்குவதை தவிர்த்து பாதுகாப்பான இடங்களில் தங்க வேண்டும் என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது. கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தரராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன் உட்பட பலர் உள்ளனர்.

### வடகிழக்குப் பருவமழை தீவிரம்:

# ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை அறிவுறுத்தல்!

சென்னை, அக்.23- வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை சார்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர் மழை பெய்து வரும் நிலையில், தீபாவளி விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் திறக்கப்படவுள்ளதால் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பள்ளிக் கல்வித் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பள்ளி வளாகத்தில் கட்டடங்கள், கழிப்பறைகள், சுவர்களை ஆய்வு செய்து செடி, கொடிகளை அகற்ற வேண்டும்.

மாதந்தோறும் பராமரிப்பு, ஆய்வு செய்து செடி, கொடிகள் வளர்வதைத் தடுக்க வேண்டும்.

ஆசிரியர்கள், மாணவர்களிடையே வளாகத்தை பராமரிக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

பள்ளியில் திறந்த வெளி கிணறு, கழிவு நீர் தொட்டி, கூரை புனரமைப்பு, மின் இணைப்பை கண்காணிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

### வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்து

# நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

நாகர்கோவில், அக். 23- வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று (22.10.2025 - புதன் கிழமை) கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மேயர் மகேஷ் வடகிழக்கு பருவ மழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்பாடு பணிகள் குறித்த விபரங்களை கேட்டறிந்தார். பின்னர் அவர் கூறியதாவது, வடகிழக்கு பருவ மழை எதிர்கொள்ள அனைத்து துறை அதிகாரிகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும். மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். மழை நீர் வடிகால் ஓடைகளில் உடைப்புகள் ஏற்பட்டால் அதை சரி செய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குடியிருப்புகளில் தண்ணீர் சூழ்ந்தால் உடனடியாக அந்த தண்ணீரை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பிளீச்சிங் பவுடர் போதுமான அளவு இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். சூறைக்காற்றில் மரங்கள் முறிந்து விழுந்தால் அவற்றை அப்புறப்படுத்த கயிறு மற்றும் மிஷின்கள் தயார் நிலையில் வைத்து கொள்ள வேண்டும்.

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளிலும் மழைநீர் வடிகால் ஓடைகளில் உள்ள மணல்களை அப்புறப்படுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாகர்கோவில் மாநகர பகுதியில் கவிமணி அரசு பள்ளி, மீனாட்சிபுரம் அரசு பள்ளி, வடசேரி பகுதியில் திருமண மண்டபம் உட்பட 6 இடங்களில் நிவாரண முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டால் அவர்களை அங்கு தங்க வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மழை காலங்களில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் தண்ணீர் சுத்தமாக வழங்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து, தங்கு தடையின்றி தண்ணீர் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மருத்துவர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். தேவைப்படும் இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என மாநகராட்சி மேயர் தெரிவித்தார்.

கூட்டத்தில் மாநகராட்சி பொறியாளர் சரவணன், உதவி செயற் பொறியாளர் ரகுராமன், மாநகர் நல அலுவலர் மருத்துவர் ஆல்பர் மதியரசு, உதவி நகரமைப்பு திட்டமிடல் அலுவலர் கெபின் ஜாய், சுகாதார அலுவலர்கள், அனைத்து துறை மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநகராட்சி பொறியாளர் சரவணன், உதவி செயற் பொறியாளர் ரகுராமன், மாநகர் நல அலுவலர் மருத்துவர் ஆல்பர் மதியரசு, உதவி நகரமைப்பு திட்டமிடல் அலுவலர் கெபின் ஜாய், சுகாதார அலுவலர்கள், அனைத்துத் துறை மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.